# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1969/17 - 2016 ජූනි මස 01 වැනි බදාදා - 2016.06.01

*1969/17 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்படும் அறிவித்தல்**

*1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 10 (இ) ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*லக்ஷ்மன் அர்ஜுன மகேந்திரன்,*
*தலைவர்,*
*இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை.*

*கொழும்பு,*
*2016, மே 31.*

**பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள்**

***2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்***

*1.1* *இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.* *1. எடுத்துக்காட்டல்.*

*2.1* *2013, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி இல. 1796/21 இல் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :* *2. பிரதான ஒழுங்குவிதிகளுக் கான திருத்தம்.*

*(1)* *ஒழுங்குவிதி 20 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஒழுங்குவிதி புகுத்தப்படுவதன் மூலம் :-*

*20.1* *அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத்தொழில் கம்பனிகள், கொடுக்கல்வாங்கல் செய்யும் தரப்பினர்களினால் அவர்களுக்கு வழங்கப்படும் ஒவ்வொரு விலைக்குறிப்பீடு/ விலைக்கோரலின் மீதான தகவலினை பதிவேற்றம் செய்துகொள்ள வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் பணத்தரகுத்தொழில் கம்பனியொன்றினூடாக, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட 30 நிமிடங்களுக்குள் பிந்தாமல், அத்தகைய பணத் தரகுத்தொழில் கம்பனிகளுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள அதே நேர கணினி வழி இடைமுகமூடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*

*20.2* பணத் தரகுத்தொழில் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் அத்துடன்/ அல்லது வணிக அறைக்குப் பொறுப்பான அலுவலர் இங்கே குறிப்பிடப்பட்ட தகவல்களைக் குறித்துரைக்கப்பட்ட நேரகாலத்திற்குள் அனுப்பி வைப்பதற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

*20.3* தொலைநகல் மூலம் அனுப்பப்படுகின்ற விலைக்குறிப்பீடு/விலைக்கோரல் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்கள் கணினி வழி அதேநேர விலைக்குறிப்பீட்டு முறைமை பழுதடைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எனினும் அத்தகைய தகவல்கள் கணினி முறைமை திருத்தப்பட்டதும் கணினி முறைமைக்குள் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

*3. நடைமுறைக்கு வரும் திகதி.*

*3.1* இத்திருத்தம் *2016*, யூன் *1* ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

*6- 467*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.